**In the Court of the Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **STC 611/2022** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : **அழகுமலை** | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : பழனிதேவர் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.10.2025

---

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

சிவக்குமார் என்பவர் எனது மருமகன் என்றால் சரிதான். அவரும் எதிரி வைரமணி என்பவரும் நண்பர்கள் என்றால் சரிதான். அவர்கள் 4 , 5 வருடங்களாக பழகி வந்தார்கள். நான் வட்டிக்கு கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு எதிரியை பணம் வாங்வதற்கு ஒரு வருடம் முன்பிருந்து தெரியும். அதற்கு முன்பு எதிரியிடம் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை. என்னிடம் எதிரி ஒரு லட்சம் கேட்டார் நானும் அதை கொடுத்தேன். 13.08.2022ம் தேதி காலையிலேயே ரூபாய் 1 லட்சம் கேட்டார். பின்பு இரண்டு மணி நேரம் கழித்து பணம் வாங்கி சென்றார். ரூபாய் 1 லட்சத்தை 500 ரூபாய் நோட்டாக கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது எனது மனைவி என்னுடன் இருந்தார். என்னை யார் என்று எதிரிக்கு தெரியாது என்றும், எனது மருமகன் சிவக்குமாரை தான் தெரியும் என்றாலும் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி எனது மருமகன் சிவக்குமாரிடம் வங்கியில் கடன் பெறுவதற்காக வழக்கு காசோலையை கொடுத்தார் என்றும் ஆனால் அதை நான் மோசடியாக பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி இரண்டு மாத காலத்தில் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார் . வட்டி எதுவும் பேசவில்லை. எதிரி காசோலையை எழுதி கொண்டு வந்தார். எனக்கு எழுதப்படிக்க தெரியும். ம.சா.ஆ.1 காசோலையில் தமிழும் ஆங்கிலத்திலும் மாறி மாறி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் ஒரே கையெழுத்து போடப்பட்டுள்ளது. எதிரி எனக்கு நேரடியாக பணம் தரவேண்டியதில்லை என்றாலும் எழுதப்படாத காசோலையை மோசடியாக பயன்படுத்தி எதிரிக்கு ஆதரவாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி ரூபாய் 1 லட்சம் விவசாயத்தின் மூலம் கிடைத்தது. குறுகிய கால பழக்கத்தில் யாரும் நம்பி ரூபாய் 1 லட்ச கொடுக்க மாட்டார்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை ;** இல்லை

S.d. Azhagumalai
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.